DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 6 |
| Name | : | திரு. கோவிந்தராஜ் |
| Father Name | : | திரு. கோபி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 21 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனபள்ளியில் குடியிருந்து கோபியில் கட்டிட சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 04-09-2022 அன்று இரவு 1.30 மணி அளவில் நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தோம். சீட்டு விளையாட்டில் சண்டை ஏற்பட்டதாகவும், அதில் ஒரு நபரை கடப்பாரையால் அடித்து

அவர் மரணமடைந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 7 |
| Name | : | திருமதி. வான்மதி. |
| Father Name | : | திரு. சுப்பிரமணியம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் சலங்கபாளையம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உதவி பொறியாளராக பணியாற்சி வருகிறேன். 21-09-2022 அன்று காவல்நிலையத்திலிருந்து வந்து என்னை விசாரித்தனர். 04-09-2022 அன்று விடியற்காலை 1மணி அளவில் பழனியப்பா நகரில் ஞானேஸ்வரன் வீட்டு மின் இணைப்பில் மின் சப்ளை இருந்ததா என்று என்னை விசாரித்தனர். நான் மேற்படி மின் இணைப்பு குறித்து கள ஆய்வு மேற்கொண்டு மேற்படி நாளில் இரவு முழுவதும் சீரான மின் இணைப்பு இருந்தது

என்று சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சான்றிதழ் என்னால் வழங்கப்பட்டது தான். **மேற்படி சான்றிதழ் அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

04-09-2022 அன்று அதிகாலை 1.30 மணி அளவில் மின் இணைப்பு இருந்ததா இல்லையா என்று குறிப்பாக என்னால் சொல்ல இயலாது என்றால் நான் விசாரித்த வகையில் இருந்ததாக தெரிந்துகொண்டேன்.

**மறு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 8 |
| Name | : | திரு. இளவரசன் |
| Father Name | : | திரு. கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 20 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.08.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனபள்ளியில் குடியிருந்து கோபியில் கட்டிட சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 04-09-2022 அன்று இரவு 8.00 மணி அளவில் சாப்பிட்டுவிட்டு நாங்கள் தூங்கிவிட்டோம். அதிகாலை 1.30 மணி அளவில் என்னுடன் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் என்னை எழுப்பி சீட்டு விளையாட்டில் சண்டை ஏற்பட்டதாகவும், அதில் ஒரு நபரை கடப்பாரையால் அடித்து அவர் மரணமடைந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். இது

குறித்து வீட்டின் உரிமையாளருக்கு தகவல் கொடுத்து அவரின் அறிவுறுத்தலின்பேரில் எங்களுடன் இருந்தவர்கள் போலீசில் புகார் கொடுத்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**